தென்னாடு

Thennadu
Saiva Tamil Monthly Magazine
VOL - 07 ISSUE – 04 Release - 76
24th November 2026 - Full Moon

தென்னாடு
சைவத் தமிழ் திங்கள் இதழ்
தொகுதி 07 எண் 04 இதழ் 76
2026 கார்த்திகை 8 ஆம் நாள் - நிறைமதி



வினைப்பயன் நீங்கி வாழ்வில் வளம்பெற கழுவாய் வழிபாடுகள்

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர் எனும் சைவ ஞானநூல் வாக்கிற்கு இணங்க, உயிர்கள் தத்தம் வினைப் பயன்களுக்கு ஏற்பப் பிறவியெடுத்து, கருவில் தோன்றியது முதல் வாழ்வின் இறுதிவரை பல்வேறு இன்ப துன்பங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் எதிர்கொள்கின்றன.

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கேதீச்சரத் தேவாரத்தில் அருளிய **பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்** என்னும் திருவாக்கிற்கு இணங்க, பாவவினைகளை அறுத்தருள வல்லவர் சிவபெருமானே என்பதை உணர்ந்து, அந்த வினையின் வீரியத்தில் இருந்து விடுபட்டு வாழ்வில் வளம்பெற வேண்டிக் கழுவாய் வழிபாடுகள் தென்னாட்டில் மேற்கொள்ளப்படும்.

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது என்ற திருக்குறளின் படி மனக்கவலையைப் போக்கி, எண்ணியவை எல்லாம் திண்ணமாக நிலைபெற, தனக்குவமை இல்லாத சிவபெருமானைத் திருமுறைகளால் அர்ச்சனை செய்து, அவனருளாலே அவன் தாள் வணங்கி, வாழ்வில் நீங்கள்

ஓங்கிய செல்வம்
நல்ல அறிவு
ஞானம்
நீண்ட ஆயுள்
உகந்த பணி
நோயற்ற வாழ்வு
தக்கவயதினில் நல்ல திருமணம்
தவறாத சந்தானம்

பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்காக திருவருளை வேண்டி விண்ணப்பம் வைத்து, தனித்தனியான சிறப்பு வழிபாடுகள் தென்னாடு சிவமடத்தில் ஆற்றப்படும். இந்த வழிபாடுகளில் நீங்கள் பங்குபற்றி திருவருள் துணையுடன் பயன்பெறத் தென்னாடு வாருங்கள்.

தொடர்பு:

தென்னாடு சிவமடம்,
தென்னாடு வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
0707701111 ; 021 222 9722

தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

தென்னாடு

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்

அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான் முக்கணாதி மேயது முதுகுன்றே

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 கார்த்திகை நிறைமதி வெளியீடு - தொகுதி 07 எண் 04 இதழ் 76

பொருளடக்கம்

02	- முதல்வர் எண்ணம்
03	- நிறைமதி அறிக்கை
04, 05, 06	- ஆவணப்படுத்தல் செய்திகள்
07	- ஆசிரியர் தலைப்பு
08,09,10,11	- ஆவணப்படுத்தல் செய்திகள்
12, 13	- சிவபுராண விளக்கவுரை
14, 15	- அடியார் பெருமை
16, 17, 18	- சிவபூமியில் சிவனைத்தேடி
19	- ஆவணப்படுத்தல் செய்திகள்
20, 21	- ஈழத்துச் சித்தர்கள்
22, 23	- பெரியபுராணம் தொடர்கதை
24, 25	- சி.கே.சு ஐயாவின் பெரியபுராண உரை
26	- ஆசிரியர் தலைப்பு (ஆங்கிலம்)
27, 28	- பெரியபுராணம் தொடர்கதை (ஆங்கிலம்)

அட்டைப் படக்குறிப்பு

முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் யானைகள் மீது திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலம் (25-12-2024)

தென்னாடு இதழுக்கான கொடையாளர்கள்

(அ) சிவத்திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்
(ஆ) சிவத்திரு. தெய்வநாயகம் சௌந்தரராசா
(இ) சிவத்திரு. தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரகுமார்
(ஈ) சிவத்திரு. கனகரத்தினம் சுதர்மன்
(உ) சிவத்திரு. சிவப்பிரகாசம் விஜயநேசன்
(ஊ) சிவத்திரு. கிருஷ்ணமூர்த்தி கிரிதரன்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எழுபத்து ஆறாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 08 ஆம் நாள் நிறைமதி அன்று (24-11-2026 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிற மொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக் கிறோம்.



தென்னாடு குருமரபு வாழ்த்து

ஐம்பூத நாதரின் திருவரு ளாலும்
ஆலமர் செல்வரின் குருவரு ளாலும்
பைந்தமிழ்ச் சார்ந்துநற் சிவநெறி சிறக்கப்
பாரினில் நன்மைகள் ஓங்கத்தென் னாடு
செந்தமிழ் ஆகமச் சிவமடம் உதயம்
சீர்திகழ் மடம்இதன் செய்பணி நாளும்
எங்கணும் பொலிந்தருள் விளங்கிட வேண்டி
எழிற்குரு மரபது தழைகவே மாதோ.

இயற்றியவர் : சிவத்திரு சு.குஞ்சிதபாதம்
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்.
05-07-2026.

தென்னாடு சிவமடத்தின் நோக்கங்கள் - சுருக்கம்

- சைவ சித்தாந்த வழியில், திருமுறை நெறியில் வழிபாடுகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- சைவ சமயத்தின் மரபினைப் பேணிப் பாதுகாத்தல், மேன்மையுறச் செய்தல் மற்றும் ஊடுகடத்துதல்.
- பத்தி மொழியான தமிழின் மொழி, பண்பாட்டு, மரபினைப் பேணிப் பாதுகாத்தல், மேன்மையுறச் செய்தல் மற்றும் ஊடுகடத்துதல்.

தொடர்பு கொள்ள:
தென்னாடு சிவமடம்
தென்னாடு வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,
இலங்கை.

Contact Thennadu
Thennadu Sivamadam
Thennadu Road,
Kokuvil East,
Kokuvil, Sri Lanka.

+94 70 770 1111 | +94 21 222 9722 | +61 499 493 300
www.thennadu.org | thennavan@thennadu.org



சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



கார்த்திகை விளக்கீடு
தமிழரின் இரண்டாயிரம் ஆண்டுகாலப் பண்பாட்டு நீட்சி

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)

தமிழர் பண்பாட்டு வரலாற்றில் காலங்களைக் கடந்து நிலைத்திருக்கும் தொன்மையான விழாக்களில் கார்த்திகை விளக்கீடு தனிச்சிறப்புடையது. இல்லங்களிலும் திருக்கோயில்களிலும் அகல் விளக்கேற்றி ஒளியைப் போற்றும் இவ்விழா, தமிழரின் இயற்கை உணர்வு, இறைநம்பிக்கை, குடும்ப மரபு, சமூக ஒற்றுமை ஆகியவற்றோடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்புடையதாக விளங்குகிறது.

சங்க இலக்கியங்களில் காணப்படும் கார்த்திகை விளக்கீடு தொடர்பான குறிப்புகள், இவ்விழாவின் தொன்மையை அறிந்து கொள்வதற்கான முக்கியமான இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவு
- அகநானூறு பாடல் 141

கார்த்திகைத் திங்கள் நிறைமதியும் அறுமீன் என்ற கார்த்திகை விண்மீனுடன் சேர்ந்த இரவில் தெருக்களில் விளக்கு ஏற்றி, மாலைகளால் அலங்கரித்து, பழங்காலத்திலிருந்தே புகழும் பெருமையும் கொண்ட தொன்மையான ஊரில் விளக்கீட்டினைக் கொண்டாடினர் என்கிறது இரண்டாயிரம் ஆண்டு பழமையான அகநானூறு.

அறுமீன் பயந்த அறம் செய் திங்கள்
செல் சுடர் நெடுங் கொடி போல - நற்றிணை பாடல் 202

இரண்டாயிரம் ஆண்டு பழமையான நற்றிணையில், அறுமீன் பயந்த அறம் செய் திங்கள் என்பது கார்த்திகைத் திங்களில், செல் சுடர் நெடுங் கொடி போல என்றால் நீண்ட வரிசையாக ஒளிரும் விளக்குகளை போல என்ற உவமையைத் தருகிறது. இதன் அடிப்படையில் கார்த்திகையில் சுடர்களை வரிசையாக ஏற்றிக் கொண்டாடினர் என்ற செய்தி வெளிப்படுகிறது.

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகைநாள்
தளத்தேந்தி இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்
- திருஞானசம்பந்தர் தேவாரம்

எனவே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொன்மையுடைய கார்த்திகை விளக்கீட்டு விழாவை இன்றும் கொண்டாடி வருகின்றோம் என்ற பெருமிதத்துடன், தமிழரின் தொன்மையான பண்பாட்டு மரபையும் அதன் தொடர்ச்சியையும் உலகறியச் செய்வோம். நம் முன்னோர் போற்றிப் பேணிய இவ்விளக்கீட்டு மரபை, அதன் சிறப்பும் பொருளும் குன்றாமல் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் ஊடுகடத்துவோம்.

நம் இல்லங்களிலும் திருக்கோயில்களிலும் வீதிகளிலும் அகல்விளக் கேற்றுவோம். அடுப்பங் கரையிலும் கிணற்றடியிலும் அம்மியடியிலும் ஆட்டுக்கல் இருக்கும் இடங்களிலும், வாசற்படிகளிலும் சுவாமி அறைகளிலும் விளக்கேற்றுவோம்.

சங்கத் தமிழர் ஏற்றிய கார்த்திகை விளக்கின் ஒளி, இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து இன்றும் நம் இல்லங் களில் ஒளிரட்டும்.

திருச்சிற்றம்பலம்



சிவத்திரு. தென்னாடு நிலவன்
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



தென்னாடு நிறைமதி அறிக்கை

(25-10-2026) – தென்னாட்டின் எழுபத்து ஐந்தாவது திங்கள் இதழ் வெளியீடு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 08 ஆம் நாள் நிறைமதி நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குண ராசா ஐயா அவர்கள், கிரீன்லேயர் சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவர் சிவத்திரு. பாக்கியநாதன் சசிக்குமார் அவர்கள், தென்னாடு ஆசிரியரும் சித்த வைத்தியருமான சிவத்திரு. கணேஷ் கபிலன் அவர்கள் மற்றும் சைவ மாணவர் சபையினருடன் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், சைவ மாணவர் சபையின் துணைத்தலைவர் சிவத்திரு. முருகேசு ஜோதீஸ்வரன் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் எழுபத்து ஐந்தாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

மேலும் இந்நாளில் ஐம்பூதநாதருக்கு அன்னத்திரு முழுக்கு இடம்பெற்று, மரக்கறிகள் பழங்கள் படைத்துச் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. இதே நன்னாளில், **'தென்னாடு உழவாரப் பணிகள்'** விடுதி மாணவர்களால் தென்னாடு சிவமடத்தில் முன்னெடுக் கப்பட்டிருந்தது. (26-10-2026) – ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து மூவாயிரம் திருப்பாடல்கள் கொண்ட திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூல நாயனாரின் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(02-11-2026) – சிவத்திரு. கந்தையா பத்மநேசன் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம் பெற்றன. (06-11-2026) – ஐப்பசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (09-11-2026) – வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அருள்மிகு ஆனிலையப்பர் பெருமானுக்கு முதலாம் ஆண்டு நிறைவு சங்குநீராட்டுப் பெருவிழா வழிபாடுகள் சிறப்பாக இடம் பெற்றன. இவ்விழாவிற்கான வேள்வி வழிபாடுகளை தென்னாடு முதன்மை அருச்சுனைஞர் சிவத்திரு. உயிரொளிசிவம் பிரதாபனார் அவர்கள் ஆற்றி வைத்திருந்தார். இந்நிகழ்விற்கான பூசைக் கட்டளைகளை திருக்கோயில் அருட்கொடையாளர், அமரர்கள் தம்பிராசா தில்லைநாதன் மற்றும் சர்வேஸ்வரி தில்லைநாதன் ஆகியோரின் நினைவாக மகன் சிவத்திரு. தில்லைநாதன் கந்தராசா அவர்கள் பொறுப்பேற்று வழங்கி அருளியிருந்தார்.

(10-11-2026) – செவ்வேள் அறுநாள் நோன்பு (கந்தசட்டி) தொடக்க நாள் பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. தொடர்ந்து முருகப் பெருமானுக்கு ஆறு நாட்களும் அடியார்கள் கூடி கந்தன் கவின் அறுமைப் பதிகம் பாடி வழிபாடு ஆற்றினர். ஆறாம் நாள் (15-11-2026) முருகப் பெருமானுக்கு திருமஞ்சனம் ஆற்றி சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன. (15-11-2026) – சிட்னியில் செந்தமிழ் மந்திரங்கள் ஓதித் திருமுறைகளை விண்ணப்பம் செய்து வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாடுகளை தென்னாடு முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்கள் பொன்னும் பொருளும் அருளும் ஞானமும் வேண்டி, எல்லாம் வல்ல ஒப்பிலாமுலை அம்மை உடனாய மாசிலாமணி ஈசரை எழுந்தருளச் செய்து, **"இடரினும் தளரினும்", "வாசி தீரவே காசு நல்குவீர்"** என்ற திருமுறைகளை விண்ணப்பம் செய்து ஆற்றி வைத்திருந்தார்.

(19-11-2026)– கொக்குவில் இந்துக் கல்லூரி அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலின் மூன்றாம் ஆண்டு நிறைவு சங்குநீராட்டுப் பெருவிழா வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இவ்விழாவிற்கான வேள்வி வழிபாடுகளை தென்னாடு முதன்மை அருச்சுனைஞர் சிவத்திரு. உயிரொளிசிவம் பிரதாபனார் அவர்கள் ஆற்றி வைத்திருந்தார். இந்நிகழ்விற்கான பூசைக் கட்டளைகளை திருக்கோயில் அருட்கொடையாளர், சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் குடும்பத்தினரும், இறையமுதுக் கட்டளைகளை தென்னாடு முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களும் பொறுப்பேற்று வழங்கி அருளியிருந்தனர். (22-11-2026) – கார்த்திகைத் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

சைவப்புலவர், சைவபண்டிதர் சுந்தரமூர்த்தி துஷ்யந்த் அவர்கள் எழுதிய இரு நூல்களின் வெளியீட்டு விழா



மட்டக்களப்பு சைவத் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில், சைவப்புலவரும் சைவபண்டிதரும் 'தென்னாடு' இதழின் ஆசிரியருமான **சுந்தரமூர்த்தி துஷ்யந்த்** அவர்கள் எழுதிய **'இந்துப் பண்பாட்டு மரபில் ஆகமங்கள்'** மற்றும் **'இந்துக் கோயில்களும் கலைகளும்'** ஆகிய இரு அரிய ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 07-11-2026 அன்று பிற்பகல் 2 மணியளவில் பெரிய கல்லாறு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் மிகச் சிறப்பாக ஆரம்பமாகியிருந்தது.

மட்டக்களப்பு சைவத் தமிழ் மன்றத் தலைவரும் கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியுமான சைவப்புலவர், சைவபண்டிதர் பேராசிரியர் தி. சதானந்தன் தலைமையில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. பெரிய கல்லாறு அருள்மிகு சர்வார்த்த சித்தி விநாயகர் திருக்கோயில் சிவாச்சாரியார் சிவத்திரு இரா. கு. நடேச குணஸ்கந்த சிவாச்சாரியார் ஆன்மீக விருந்தினராகவும், சைவத் தமிழ் மன்ற நிறுவுனர் சைவப்புலவர், சைவபண்டிதர் கலாநிதி எஸ். தில்லைநாதன் முதன்மை விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மேனாள் தலைவர் பேராசிரியர் நா. வாமன், இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் சாந்தி கேசவன், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. சுபராஜ் மற்றும் இந்து சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஏமலோஜினி குமரன் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், மதிப்புறு விருந்தினர்களாகப் பெரிய கல்லாறு திருக்கோயில்களின் தலைவர்களான சிவத்திரு. செ. கனகசுந்தரம், சிவத்திரு. எஸ். பேரின்பராஜா, சிவத்திரு. த.சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், ஆசியுரை ஆகியவற்றைத் தொடர்ந்து நூல்களின் வெளியீட்டுரை, ஆய்வுரை மற்றும் கருத்துரைகள் இடம்பெற்றன. விழாவிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் திருமதி பிரசன்யா சுரேஷ், திருமதி சரணியா பபீசன், சிவத்திரு சு. விதுஷன் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் மாணவர்களின் இசை மற்றும் நடன நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன. இறுதியில் நூலாசிரியரின் ஏற்புரையுடனும் நன்றியுரையுடனும் விழா இனிதே நிறைவுற்றது.

இவர் தென்னாடு இதழில் ஆரம்ப காலம் தொட்டே **'சிவபூமியில் சிவனைத் தேடி'** என்ற தொடரின் வாயிலாக ஈழத்து வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் கோயில்களைப் பற்றிச் சிறப்பித்து எழுதி வருபவர். குறிப்பாக, காலத்தால் சிதைவுற்று அழிவடைந்த ஈழத்துச் சிவன்கோயில்களின் வரலாற்றுத் தகவல்களைத் திரட்டி, மிகப்பெரும் ஆவணப்படுத்தல் பணியை அவர் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். அவரின் ஆழமான ஆய்வுத் திறனுக்கு மற்றுமொரு மகுடமாக இவ்விரு நூல்களும் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

பன்னாட்டு இந்துக் குருமார் ஒன்றியத்தின் குருபீடாதிபதியாகப் பீடம் ஏறினார் சிவாச்சாரியார் நா. சோமாஸ்கந்த குருக்கள் அவர்கள்



யாழ்ப்பாணத்தைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சமய, சமூகப் பணியாற்றி வரும் பன்னாட்டு (சர்வதேச) இந்துக் குருமார் ஒன்றியத்தின் உயரிய குருபீடாதிபதியாக **'கிரியா கலாபமணி' கலாநிதி சிவத்திரு நாவண்ணா சோமாஸ்கந்த சிவாச்சாரியார் அவர்கள்** ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். ஒன்றியத்தின் அறிஞர் அவை மற்றும் ஆட்சிமன்றக் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகமகலாநிதி சிவத்திரு கு. வை. க. வைத்தீசுவர குருக்களும் செயலாளர் சிவத்திரு ச.சாந்தரூப குருக்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவரது ஆன்மீகத் தகுதி, கல்விச் சிறப்பு, ஆளுமை, பண்புநலம், சமயப் பற்றுறுதி மற்றும் நீண்டகாலச் சமயத் தொண்டுகளை மதிப்பீடு செய்து இவ்வுயரிய தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த நாற்பதாண்டு கால வரலாற்றில் போர்க்காலச் சூழ்நிலைகளிலும் அதற்குப் பின்னரான காலகட்டங்களிலும் அந்தண சிவாச்சாரியார் சமூகத்தின் ஒற்றுமைக்காகவும் சமய மரபுகளின் பாதுகாப்பிற்காகவும் இவ்வமைப்பு ஆற்றிய பணிகள் போற்றுதலுக்குரியவை. இத்தகைய பாரம்பரியம் மிக்க அமைப்பிற்கு வலிமையான வழிகாட்டல் கிடைத்திருப்பது சிறப்பாகும்.

சைவ மரபின் பெருமைக்குரிய நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகாசந்நிதானம் தவத்திரு. சிவசுப்பிர மணியம் ஐயர் (முணி ஐயர்) ஆதீனத் தலைமைப் பொறுப்பினை ஏற்று, ஆன்மீக மற்றும் சமயப் பணிகளைச் சிறப்புற முன்னெடுப்பதற்குப் பெருந்துணையாக விளங்கிய வரலாற்றுப் பெருமைக்குரியவர் சிவத்திரு சோமாஸ்கந்த சிவாச்சாரியார் ஆவார். நல்லை ஆதீனத்துடனான அவரது ஆன்மீக உறவும் அர்ப் பணிப்பும் என்றும் நினைவுகூரத்தக்கவை. உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள், சமய நிகழ்வுகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள் மற்றும் கல்விப் பணிகளை ஆற்றிவரும் அனுபவமிக்க ஆன்மீகப் பெரியாராக இவர் விளங்குகிறார். இலங்கையில் வாழும் சிவாச்சாரியார்களுக்குத் தலைவராகவும் ஆலோசகராகவும் இவர் பொறுப்பேற்றிருப்பது, சமயப் பணிகளின் தொடர்ச்சிக்கும் எதிர்காலத் தலைமுறையினரின் வளர்ச்சிக்கும் பெரிதும் வலுசேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரது நீண்ட ஆயுளும் ஆன்மீகப் பணிகளின் மேன்மையும் சிறக்க எல்லாம் வல்ல ஐம்பூதநாதரை வேண்டுவதோடு, இவரது வழிகாட்டலில் இளைய தலைமுறை சிவாச்சாரியார்களும் சைவ மரபுகளும் மேலும் சிறப்புற்று வளர்ந்திடத் துணை நிற்பாரென 'தென்னாடு சிவமடம்' சார்பிலும் வாழ்த்தி வணங்கு கிறோம்.

குறிப்பு: பெயர்கள் மற்றும் பட்டங்களில் வரும் பிறமொழிச் சொற்களை அவ்வாறே விடுகின்றோம்.

திருச்சிற்றம்பலம்

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 4,000 கிலோவுக்கும் அதிக எடைக் கொண்ட மாபெரும் சிவலிங்கம் அமையப்பெற்ற ஆதீச்சரம் திருத்தலம்



மன்னார் - யாழ்ப்பாணம் (A32) முதன்மை வீதியில் 67ஆம் கிலோமீட்டர் தொலைவில், இலுப்பக்கடவைக்கும் முழங்காவிலுக்கும் இடையிலுள்ள மூன்றாம்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள ஆதீச்சரம் சிவன் கோயிலில், 4,000 கிலோவுக்கும் அதிக எடை கொண்ட மாபெரும் சிவலிங்கமும் ஆவுடையாரும் நிறுவப்பட்டு, அதன் முதலாவது பெருந்திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா கடந்த 30-10-2026 முதல் 01-11-2026 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வன்னிப் பெருநிலத்தின் ஆன்மீக அடையாளமாகவும் கலைநயம் மிக்கதாகவும் உருவாக்கப்பட்டுள்ள இத்திருக்கோயிலில், நவம்பர் 01ஆம் திகதி நடைபெற்ற நன்னீராட்டு வழிபாடுகள் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சரத் திருக்கோயிலின் தலைமை அருச்சுனைஞர் சிவத்திரு கருணாநந்த குருக்கள் தலைமையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு, விழாவின் போது ஆதீச்சரநாதர் பெருமான் அடியார்களுக்கு எழுந்தருளி அருள்பாலித்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்வில் பல அடியார்கள் கலந்துகொண்டு திரு வருளையும் குருவருளையும் பெற்றுக்கொண்டனர்.

திருச்சிற்றம்பலம்

வர்த்தக, வாணிய மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ வசந்த சமரசிங்க அவர்கள் வண்ணை வைத்தீசுவரன் கோயிலில் வழிபாடு

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான அலுவல் சார்ந்த பயணத்தை மேற்கொண்ட வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் **கௌரவ வசந்த சமரசிங்க அவர்கள்,** கடந்த 30-10-2026 அன்று காலை வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு வைத்தீசுவரன் திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடுகளை மேற் கொண்டார்.

திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு இறையருளைப் பெற்றுக்கொண்ட அமைச்சருக்கு, கோயில் நிர்வாகத்தினர் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வின் போது, யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலக இணைப்பாளரும் யாழ் மாநகர சபை உறுப்பினருமான சுந்தரமூர்த்தி கபிலன் மற்றும் யாழ்



மாநகர சபை உறுப்பினர் தயாபரன் ஆகியோரும் உடனிருந்தனர். மற்றும் திருக்கோயில் நிர்வாத்தினர் அனைவரும் கலந்துகொண்டு அவரை சிறப்புடன் வரவேற்று சிறப்பித்து கௌரவித்திருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



நாவலரை நாளும் போற்றுவோம்!

ஒரு சமூகம் தனது வரலாற்றைப் பெருமையுடன் நினைவு கூர்வது மட்டும் அதன் எதிர்காலத்தைப் பாதுகாத்துவிடாது. அந்த வரலாற்றில் தோன்றிய ஆளுமைகளின் சிந்தனைகளையும் செயற்பாட்டு ஆற்றலையும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்வதிலேயே அதன் உண்மையான வளர்ச்சி தங்கியுள்ளது. அந்த வகையில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சைவ உலகில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய சீர்வளர்சீர் ஆறுமுக நாவலர் அவர்கள் இன்று மீண்டும் நினைவுகூரப்பட வேண்டியவராக மட்டுமன்றி, அவரது பணிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட வேண்டியனவாகவும் உள்ளன!

ஆறுமுக நாவலர் வாழ்ந்த காலம் சைவ சமயம் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட காலம். கிறித்தவ மிசனரிகளின் மதப்பரப்பல், கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, அச்சுத்துறையின் விரிவாக்கம் என்பன சைவச் சமூகத்தின் முன்னால் புதிய சவால்களைத் தோற்றுவித்தன. அந்தச் சூழலில் நாவலர் வெறுமனே எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை. மாற்றாக, சைவக் கல்விக்கூடங்களை நிறுவினார் அச்சகத்தை உருவாக்கினார் சைவ இலக்கியங்களைப் பதிப்பித்தார் சமய சொற்பொழிவுகளை முன்னெடுத்தார். அறிவின் மூலமே சமயத்தையும் பண்பாட்டையும் பாதுகாக்க முடியும் என்பதைச் செயலில் நிரூபித்தார்.

இன்று காலம் மாறியிருக்கிறது. ஆனால் சவால்கள் முற்றாக மறைந்துவிடவில்லை. இன்றைய தலைமுறையின ரிடம் தொழில்நுட்ப அறிவு பெருகியுள்ள அதேவேளையில், தமது மொழி, சமயம், இலக்கியம், பண்பாடு குறித்த ஆழமான புரிதல் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும். திருமுறைகளின் பொருள் தெரியாமல் தேவாரம் பாடுவதும், சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகளை அறியாமல் சமய அடையாளத்தைப் பெருமையாகப் பேசுவதும், ஆலய வழிபாட்டைச் சடங்குகளுடன் மட்டும் சுருக்கிக்கொள்வதும் நமது சமய வாழ்வில் காணப்படும் முரண்பாடுகளாகும்.

இத்தகைய சூழலில் நாவலரின் கல்வி மறுமலர்ச்சிச் சிந்தனை மீண்டும் அவசியமாகிறது. ஒவ்வொரு திருக்கோயிலும் வழிபாட்டுத் தலமாக மட்டுமன்றி, சமய அறிவூட்டல் மையமாகவும் திகழ வேண்டும். ஒவ்வொரு சைவ அமைப்பும் விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதுடன் நின்றுவிடாமல், இளைய தலைமுறையினருக்கான திருமுறைப் பயிற்சி, சைவ சித்தாந்த வகுப்புகள், தமிழ் இலக்கியக் கற்கைநெறிகள் ஆகியவற்றையும் முன்னெடுக்க வேண்டும்.

நாவலர் அச்சியந்திரத்தைப் பயன்படுத்தி அறிவைப் பரப்பினார். இன்று நம்மிடம் இணையம், மின்னூல்கள், சமூக ஊடகங்கள், செயற்கை நுண்ணறிவு எனப் பல்வேறு நவீனக் கருவிகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி சைவ இலக்கியங்களையும் தத்துவங்களையும் உலகளாவிய தமிழ்ச் சமூகத்திடம் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு நமக்குண்டு. நாவலரின் காலத்தில் ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பது அவசியமாக இருந்தது. இன்று அரிய நூல்களையும் ஆவணங்களையும் எண்ணிம வடிவில் பாதுகாப்பதும் அவற்றை இளைய தலைமுறைக்குக் கொண்டுசேர்ப்பதும் அவசியமாகியுள்ளது.

தன்னையே உருக்கிச் சைவத்தமிழ் பணி செய்த நாவலரவர்களது அறிவார்ந்த செயற்பாட்டையும் கல்விசார் தொலைநோக்கையும் உள்வாங்கிக்கொண்டு, இன்றைய சமத்துவம், மனிதநேயம், சமூக நல்லிணக்கம் ஆகிய விழுமியங்களுடன் சைவ மறுமலர்ச்சியை முன்னெடுக்க வேண்டும். சமயத்தின் பெயரால் மனிதர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக, அறத்தாலும் அன்பாலும் மனிதர்களை இணைப்பதே இன்றைய சைவத்தின் சமூகப் பங்களிப்பாக அமைய வேண்டும்.

நாவலர் பிறந்த மண்ணான யாழ்ப்பாணம், அவரது சிந்தனைகளை வெறுமனே குருபூசை உரைகளிலும் கட்டுரைகளிலும் மட்டுப்படுத்திவிடக் கூடாது. அவரது நூல்களை மீள்பதிப்புச் செய்தல், அவரது பெயரால் ஆய்வுக்கூடங்களை உருவாக்குதல், சைவத் தமிழ் அறிவைப் பரப்புதல், இளைய தலைமுறையினரிடம் மொழி மற்றும் சமயப்பற்றை வளர்த்தல் போன்ற ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

எதிர்வரும் ஆங்கிலத் தேதி டிசம்பர் 01, கார்த்திகை மக விண்மீன் நாவலரவர்களின் குருபூசை நாளாகும். அன்று நாவலரை நினைவுகூர்வது வரலாற்றுக் கடமை! அவரது பணிகளைத் தொடர்வது நிகழ்காலப் பொறுப்பு! அவர் ஏற்றிய அறிவுச் சுடரை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்வதே அவருக்குச் செலுத்தும் உண்மையான மரியாதையாகும்!

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம் ஆலவாய் அண்ணல் தேவாரப் பாடசாலை 13 ஆம் ஆண்டு விழா மற்றும் 8 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா



சிதம்பரம் இளமையாக்கினார் கோயில் தெருவில் இயங்கிவரும் ஆலவாய் அண்ணல் தேவாரப் பாடசாலையின் 13 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் 8 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவும் கடந்த 30-10-2026 மற்றும் 31-10-2026 ஆகிய இரு நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுத் திருமுறைப் பணியாற்றி வரும் இப்பாடசாலையின் நிறுவனர் சண்முக. மணிவாசகன், கவிதா மணிவாசகன் குடும்பத்தினர் மற்றும் தேவார ஆசிரியர் மயிலாடுதுறை சொ. சிவகுமார் ஓதுவார் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இவ்விழா முன்னெடுக்கப்பட்டது.

விழாவின் முதல் நாளான வெள்ளிக்கிழமை மாலை, கலைமாமணி பண்ணிசைப் பேரறிஞர்கள் பழனி ப. சண்முகசுந்தர தேசிகர் மற்றும் க. வெங்கடேசன் ஓதுவார் ஆகியோர் தலைமையில் ஓதுவாமூர்த்திகளின் அற்புதத் திருப்பதிக விண்ணப்பம் நடைபெற்றது. தொடர்ந்து, இந்திய அரசின் உயரிய 'பத்மஶ்ரீ' விருது பெற்ற தருமையாதீன தேவாரப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திருத்தணி ந. சுவாமிநாதன் ஐயா அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துச் சிறப்பு செய்யப்பட்டது.

இரண்டாம் நாளான சனிக்கிழமை காலை, காரைக்கால் அம்மையார் மற்றும் சமயக்குரவர் நால்வர் திருமேனிகளுக்குச் சிறப்புத் திருமஞ்சன வழிபாடும், மதுரை பொன். மு. முத்துக்குமரன் ஓதுவார், சென்னை பா. சற்குருநாதன் ஓதுவார் ஆகியோர் தலைமையில் அகத்தியர் தேவாரத்திரட்டுத் திருப்பதிகப் பாராயணமும் இடம்பெற்றன. மாலையில் மாணவர்களின் திருமுறை இன்னிசையும், கரூர் குமார. சுவாமிநாத தேசிகர் அவர்களின் சிறப்புப் பண்ணிசை நிகழ்வும் சபையோரைப் பரவசப்படுத்தின.

விழாவின் சிகர நிகழ்வாக நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், திருக்கயிலாய பரம்பரை பெருங்குளம் செங்கோல் ஆதீனம் 103 ஆவது குருமகா சந்நிதானம் **சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாசாரிய** சுவாமிகள் எழுந்தருளி மாணவர்களுக்குப் பட்டமளித்து அருளாசியுரை வழங்கினார்கள். மேலும், இந்து சமய அறநிலையத்துறைக் கூடுதல் ஆணையர் திருப்பணிச்செம்மல் பொன். ஜெயராமன் அவர்கள் கலந்துகொண்டு, திருவாவடுதுறை ஆதீன ஓதுவார் திரு. பு. சோ. மகாலிங்கம் மற்றும் திருப்பனந்தாள் காசித் திருமட ஓதுவார் திரு. வி. தியாகராஜன் ஆகியோருக்குப் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார். இறுதியில் தேவார ஆசிரியர் செ. தருண் ஓதுவாரின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

திருச்சிற்றம்பலம்

தருமையாதீன 26 ஆவது குருமகாசந்நிதானத்தின் ஏழாமாண்டு குருபூசை விழாவில்

நூறு இசைக்கலைஞர்களின் இசை விண்ணப்பம்



மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனத்தின் 26 ஆவது குருமகா சந்நிதானம் **சீர்வளசீர் சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்** ஏழாமாண்டு குருபூசை மற்றும் நூற்றாண்டு நிறைவு விழா கடந்த 17-11-2026 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1971 முதல் 2019 ஆம் ஆண்டு வரை 48 ஆண்டுகள் ஞானபீடத்தில் வீற்றிருந்து சைவமும் தமிழும் தழைத்தோங்க அருளாட்சி புரிந்த பெருமகனாரின் திருமேனி, ஆதீன வளாகத்திலுள்ள ஆனந்தபரவசர் பூங்காவில் கருங்கல் திருப்பணியுடன் திருப்பள்ளிப்படையாக (குருமூர்த்தம்) அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விழாவையொட்டி, தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகா சந்நிதானம் **சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** திருக்கூட்டத்து அடியவர்கள் புடைசூழ எழுந்தருளி, குருமூர்த்தத்தில் சிறப்புத் திருமஞ்சனமும் வழிபாடுகளும் நடத்தி அருளினார்கள். தொடர்ந்து, இந்திய அரசின் உயரிய 'பத்மஸ்ரீ' விருது பெற்ற திருத்தணி என். சுவாமிநாதன் ஓதுவாரின் திருமுறை இசைப் பணிகளைப் பாராட்டி அவருக்குப் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார்கள். மேலும், அனைத்துலகப் பன்னிரு திருமுறை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் திருவையாறு ஐயாறப்பர் திருமுறை மன்றம் இணைந்து பயிற்றுவித்த சென்னை, கோவை, புதுச்சேரி, திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், முண்டியம்பாக்கம் ஆகிய ஆறு மையங்களைச் சேர்ந்த 280 மாணவர்களுக்குத் 'திருமுறை மணி' பட்டம் வழங்கி அருளாசி வழங்கினார்கள்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக, 27 ஆவது குருமகா சந்நிதானம் அவர்களின் முன்னிலையில் நூறு இசைக்கலைஞர்கள் இணைந்து நிகழ்த்திய 'இசை விண்ணப்பம்' (சங்கீத சமர்ப்பணம்) அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. வாய்ப்பாட்டு, நாதசுரம், தவில், வீணை, வயலின், புல்லாங்குழல், சாக்சபோன், மிருதங்கம், தபேலா, கஞ்சிரா, கடம், முகர்சிங் ஆகிய பன்னிரு வகையான இசைக்கருவிகளைக் கொண்டு, மல்லாரி, கம்பீர நாட்டை, சண்முகப்பிரியா, ஆபேரி, கீரவாணி, அமிர்தவர்சினி உள்ளிட்ட பல்வேறு இராகங்களில் அமைந்த கீர்த்தனைகளைக் கலைஞர்கள் தனித்தனியாகவும் இணைந்தும் இசைத்து குரு மூர்த்தத்தில் இசை அஞ்சலி செலுத்தினர்.

மதியம் நடைபெற்ற மாகேசுவர பூசை, கருத்தரங்கம், திருமுறை விண்ணப்பம் மற்றும் பட்டிமன்ற நிகழ்வுகளில் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் சபாபதி தம்பிரான் சுவாமிகள், தருமையாதீனத் தம்பிரான் சுவாமிகள், ஆதீனப் பொது மேலாளர் அரவிந்தன், கல்வி நிறுவனங்களின் செயலாளர்கள், முதல்வர்கள் மற்றும் திரளான சிவனடியார்கள் கலந்துகொண்டு குருவருளும் திருவருளும் பெற்றுக்கொண்டனர்.

திருச்சிற்றம்பலம்

கொக்குவில் இந்துக் கல்லூரி
அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலின்
மூன்றாம் ஆண்டு நிறைவு சங்குநீராட்டு (19-11-2026)








வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அருள்மிகு ஆனிலையப்பர் திருக்கோயிலின்

முதலாம் ஆண்டு நிறைவு சங்குநீராட்டு (09-11-2026)













சிவபுராண விளக்க உரை



பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

62).மாசற்ற சோதி! மலர்ந்த மலர்ச்சுடரே!

சோதி :- ஒளிப்பிழம்பு
சுடர் :- அதனைத் தாங்கி நிற்கும் விளக்கச் சுடர்
சுடர் :- ஆதாரம்
சோதி :- நிலைக்களம்

"சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே" சோதி, சுடர், சூழொளி மூன்றின் வேறுபாடும் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். விளக்குச் சோதியில் மை, நீலமும், மேல் புகையும் மாசுகளாக இருக்கும். அவையற்ற ஒளியை மாசற்ற சோதி என்றார். மாசற்ற என்பது இனம் விளக்க வந்த அடைமொழியாய் உலகியல் ஒளியை ஒழித்து நின்றது. சோதி சுடரைப் பற்றி நின்று எரியும். சோதி மணமும், அழகும், கருவும் தோன்ற மலர் போல இருந்தது என்பதால் மலர்ந்த என்றார். பௌதிகச் சோதி விளக்கினிடம் எண்ணெயும் திரியுமாகிய ஆதாரத்தைப் பற்றி நின்று எரியும். இறைச்சோதி மனமாகிய தாமரை மலரில் அன்பு, ஆர்வம் என்ற எண்ணெயும், திரியுமாகிய இவற்றைப் பற்றி ஒளி செய்யும் என்பார். எனவே மலர்ச்சுடரே என்றார் என்பது மகாவித்வான் தண்டபாணி தேசிகர் உரை.

மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடர் எனத் தனித்தனி முடிக்க வேண்டும். சோதியை ஒளி என்றது. ஞானத்தை மலர் என்றது. உள்ளத் தாமரையின் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானத்தைப் பெற்றோரது உள்ளத்தின் கண் இறைவன் ஒளியாய் இருப்பான் என்பது அருணையார் உரை.

உலக ஒளி மாசு உடையது. ஆனால் இறைவனாகிய ஒளி மாசற்றது. புற இருளை நீக்கக்கூடியது சூரியன். ஆனால் நெஞ்சில் உள்ள அஞ்ஞானம் ஆகிய இருளை நீக்குகின்ற சோதி இறைவன்.

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி என்கிறார் திருவெம்பாவையில். அருட் சோதி,பெருஞ் சோதி, அருட்பெருஞ்சோதி என்று கொள்ள வேண்டும். உலகப் பொருள்களுக்கு ஒளி கொடுப்பது சூரியன். ஆனால் அந்த சூரியனுக்கே ஒளி கொடுப்பவன் சிவபெருமான்.

63).தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே!

தேசன் :- ஒளியையுடையவன்
தேசு :- ஒளி

சோதி எனவே ஒளி அடங்குதலின் மீண்டும் தேசன் என்பது எவ்வாறு இயைபுடைத்தாம் எனின், தேசு என்பது

முற்குரிய ஒளி அன்றி, **"நின்ற ஒளியோடு ஒழுகப்படும்"**

"உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்" என்ற நாலடியார் வரிகள் என்பனவற்றைப் போல அனைவரையும் ஒருசேரக் கவர்ச்சி செய்யும் தெய்வீக ஆற்றலை உணர்த்தி நின்றது. இதனைத் **"தேசசு"** என வழங்கும் வடமொழி. இதற்கு **"உரு"** என்றும் **"நாட்டை உடையவன்"** என்றும் **"அரசன்"** என்றும் பொருள் கொள்ளுவாரும் உளர். தேன் பல பூக்களில் இருந்து வண்டால் திரட்டப்பட்ட இனிமை உடையது. அமுது விண்ணவர்களால் பாற்கடலைக் கடந்து எடுக்கப்பட்டது. தேன் நாம் கண்டது. அமுது இலக்கியவுலகில் கேட்கப்படுவது. உயிரை வளர்த்து உடலை உறுதிப்படுத்தும் வகையில் இவ்விரண்டும் ஒத்தன. ஆதலால் **"தேனை ஒத்த அமுதனே"** என்றார். கண்டதைக் கொண்டு காணாததை உணர்த்துவது உவம மரபு. ஆதலின் இனிமையெனப் பொருள் கொண்டு அமுதத்திற்கு அடையாக்குவாரும் உளர். இவ்வண்ணம் அறிவுக்குப் புலனாகும் இறைவன் உயிர் முத்தி நிலையே பேரின்ப வீடுபேறாக மெய்யுணர்வு பெறுகிற அடியார்கள் உள்ளமே சிவபுராமாகக் கொண்டு வீற்று இருக்கின்றான் என்பார் சிவபுரனே என்றார் என்பது மகாவித்வான் தண்டபாணி தேசிகர் உரை.

தேசன்:- ஒளியாய் இருப்பவன் மேல் **"சுடர்"** என்றது. வரையறைப்பட்டுச் சிறியதாய்த் தோன்றுதலையும் இது அளவின்றிப் பேரொளியாய் நிற்றலையும் குறித்தவாறு என்க என்பது அருணையார் உரையாக அமைகிறது.

தேசன் என்றால் அறிவுடையவன் என்ற பொருளையும் தருகிறது **"தேசா நேசர் சூழ்ந்திருக்கத் திருவோலக்கம் சேவிக்க"** என்று கோயில் மூத்த திருப்பதிகத்தில் அருளுகிறார் மாணிக்கவாசகர்.

மலமாகிய இருளை நீக்குபவன் ஒளி உடையவனாகி சிவபெருமான். எனவே சிவனை தேசன் என்று கூறினார் மாணிக்கவாசகர்.

மேலும் தேசன் என்றால் ஞானத்தில் உயர்ந்தவன் என்று பொருள். அப்படி ஞானத்தில் உயர்ந்தவன் தேனைப் போல இனிப்பவன் என்று சொன்னால் தேனைப் போல எளிதில் கிடைக்கக் கூடியவன் என்று பொருள்படும். ஆனால் அவன் அமுதம் போன்றவன் என்று கூறினால் சிவன் அறியமுடியாதவன் ஆகின்றான். எனவே சிவனை நினைந்து உருகுகின்ற அடியாருக்கு எளிவந்த பிரானாகவும், யான் எனது என்ற தற்போதம் உடையவருக்கு அரியவனாகவும் சிவன் விளங்குகின்றான்.

இதைத்தான் **"அது, பழச் சுவையென, அமுதென அறிதற்கு அரிதென,எளிதென அமரரும் அறியார் இது, அவன் திருவுரு"** என்று கூறுகிறார்.

சிவபுரம் என்றால் சிவலோகம் என்று பொருள். இதைத்தான் திருவெம்பாவையில் **"தேசன், சிவலோகன் தில்லை சிற்றம்பலத்துள் ஈசனார்க்கு அன்பார்? யாம்ஆர்?ஏலோர் எம்பாவாய்!"** என்று அருளுகின்றார்.

சிவலோகம் என்றால் **"அடியவர் உள்ளம்"** என்று பொருள் கொள்ளலாம். இதைத்தான் மாணிக்கவாசகரும் **"இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி"** என்றும் **"பந்தணை விரலியும் நீயும், நின் அடியார் பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே!** என்று அருகின்றார்.

சிவனை வழிபாடு செய்தால் அவனை வழிபாடு செய்த பயன் மட்டுமே கிடைக்கும். ஆனால் அடியவரை வழிபாடு செய்தால் சிவனை வழிபட்ட பயனும், அடியாரை வழிபட்ட பயனும் கிடைக்கும்.

64)."பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!"

ஆரியன்:- பூசிக்க தக்கவன் என்றது குருநாதனை.

குரு தன்னடியடைந்த பக்குவ நிலையுடைய மாணாக்கனுக்குப் பாச நாசம் செய்து உயர்த்துவான். அது போல இறைவன், ஆன்மாவின் பற்றறுத்துப், பற்றற்றான் பற்றினைப் பற்றச்செய்து உயர்த்தினமையின் **"பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே"** என்றார்.

பாரித்தல்:- பெருமை உடையதாக்குதல்.

பாசம்:- உயிர்களை கட்டுவது. விருப்பம் போலக் திரியும் ஆடு மாடுகளை கட்டும் கயிறு போல உயிர்களை கட்டியிருக்கும் ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம் ஆகிய இவற்றை உணர்த்தும். மும்மலங்களும் பாசம் என்னும் வழக்கு உண்மையை **"பசுக்களைக் கட்டியபாசம் மூன்றுண்டு"** என்னும் திருமந்திரப் பகுதியானும் உணர்க. **"பகல் என்னும் பண்பினை பாரிக்கும் நோய்"** என்புழிப்போலப் 'பாரித்தல்' என்பது வளர்த்தல், பெரிதாக்குதல் என்னும் பொருளில் வந்தமையை காண்க என்பது மகாவித்வான் தண்டபாணி தேசிகர் உரை.

"பாசமாம் பற்று" என்றது காரியத்தைக் காரணமாகக் குறித்த படி பாசம் என்ற காரியத்தால் பற்று என்ற காரியம் நடந்தது. பற்று என்றால் **"யான்"** என்ற அகப்பற்றும் **"எனது"** என்ற புறப்பற்றும் ஆகும்.

பாரித்தல்:- வளர்த்தல்

இதற்கு ஞானத்தை என்னும் செய்யப்படுபொருள் வருவிக்க வேண்டும். அதாவது சிவன் ஞானத்தை வளர்த்தல் என்று கொள்ள வேண்டும். என்பது அருணையார் உரை.

ஆரியன்:- ஆசிரியர்

பாசம்:- ஆணவ மலம்

பாசமாகிய ஆணவ மலத்தை சிவபெருமானே அறுக்க முடியும். ஏனென்றால் அவன் ஒருவனே பாசமற்றவன். **"மூன்று திறத்து உள்ளாரும் மூல மலத்து உள்ளார்கள் தோன்றலர் தொத்துள்ளார் துணை"** என்ற திருவருட்பயன் குறளில் எல்லா ஆன்மாக்களுக்கும் ஆணவமலம் உண்டு என்று கூறுகிறார் உமாபதி சிவாச்சாரியார்.

இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கிய பெருமானே பாசத்தை அறுக்க கூடியவர். இதைத்தான் **"அகத்து உறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனை சகத்தவரும் காண்பாரோ தான்."** என்கிறார்.

நோயின் தன்மை தெரிந்தவர் தான் நோயைப் போக்க வல்லவர்கள். அதுபோல ஆணவமலம் என்னும் ஆன்மாவின் நோயைத் தீர்க்க வல்லவர் சிவபெருமான் ஒருவரே. ஆணவ மலம் **"ஆவரண சக்தி"** கொண்டு உயிரின் அறிவை மறைக்கிறது.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்


வட திருமுல்லைவாயில்

"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ் வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"

வட திருமுல்லைவாயிலில் துயர் களையுமாறு விண்ணப்பித்தல்

ஒற்றியூர் தல எல்லையில் இரு கண்பார்வையும் மறைக்கப்பட்ட சுந்தரனார், ஆங்காங்கே இருப்போரிடம் வழிகேட்டவாறே திருவாரூர் நோக்கிப் பயணிக்கின்றார். இப்பயண வழியில் முதற்கண் வட திருமுல்லைவாயிலைச் சென்று சேர்கின்றார். அங்கு எழுந்தருளியுள்ள மாசிலாமணீசுவரப் பரம்பொருளைப் **"திருவும் மெய்ப்பொருளும்"** எனும் திருப்பதிகத்தால் பணிந்தேத்தி, **"அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே"** என்று உளமுருகி விண்ணப்பிக்கின்றார்:

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியா(து) உறாமைகள் செய்தும் ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ் திருமுல்லை வாயிலாய் வாயினால்
உன்னைப் பரவிடும் அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே
- (சுந்தரர் தேவாரம் - வட திருமுல்லைவாயில் - திருப்பாடல் 1)

இப்பதிகத்தின் மூன்றாம் திருப்பாடலில், தம்முடைய கண் பார்வை பறிபோன காரணத்தை நினைந்து, **"சங்கிலிக்காக என்கண் கொண்ட பண்ப"** என்று இறைவனிடம் உரிமையோடும் நயத்தோடும் குறிப்பிடுகின்றார்:

தண்பொழில் ஒற்றி மாநகருடையாய் சங்கிலிக்கா என்கண் கொண்ட
பண்பநின் அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே
- (சுந்தரர் தேவாரம் - வட திருமுல்லைவாயில் - திருப்பாடல் 3)

நான்காம் திருப்பாடலில், பிற்காலத்தில் அருணகிரிநாதர் போன்றோரால் போற்றிப் பாடப்பெற்ற **"திருப்புகழ்"** எனும் சொல்லாடலை முதன்முதலாகத் திருமுறைகளில் கையாண்டு இறைவனைத் துதிக்கின்றார்:

செந்நெலங்கழனி சூழ் திருமுல்லைவாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலம் தமிழால் பாடுவேற்(கு) அருளாய் பாசுபதா பரஞ்சுடரே
-(சுந்தரர் தேவாரம் - வட திருமுல்லைவாயில் - திருப்பாடல் 4)

ஆறாம் திருப்பாடலில், **"ஐயனே! குற்றங்களைக் குணமாகக் கொண்டருளும் நின் கொள்கையால் அடியனேன் மிகைபடச் சில செயல்களைப் புரிந்து விட்டேன்! உன் திருவடிச் சார்பன்றி மற்றொன்றில் சிறிதும் பற்று வையாத எளியேனின் பிழையை இவ்வொருமுறை பொறுத்தருள மாட்டாயோ?"** என்று உளமுருகி முறையிட்டுப் பணிகின்றார்:

மற்றுநான் பெற்றதார் பெறவல்லார் வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையால் மிகைபல செய்தேன்
செற்று மீதோடும் திரிபுரம் எரித்த திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே
- (சுந்தரர் தேவாரம் - வட திருமுல்லைவாயில் - திருப்பாடல் 6)

ஏழாம் திருப்பாடலில், **"முல்லைவாயில் முதல்வனே! இரவும் பகலும் உன் திருவடிக்கே தொண்டு புரிபவனாகிய எளியேனுக்கு இரங்காயோ?"** என்று கல்லும் கசிந்துருகும் தன்மையில் பாடுகின்றார்:

தினிபொழில் தழுவு திருமுல்லைவாயில் செல்வனே எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே
- (சுந்தரர் தேவாரம் - வட திருமுல்லைவாயில் - திருப்பாடல் 7)

எட்டாம் திருப்பாடலில், **"முல்லைவாயிலுறை ஆதியே! அன்று வெண்ணெய்நல்லூரில் நாயினேனை வலிந்து வந்து ஆட்கொண்டருளிய வள்ளலே! சற்றேனும் திருக்கண் பாராயோ?"** என்று பலப்பல உரைத்து மன்றாடித் தொழுகின்றார் நம் வன்தொண்டப் பெருந்தகையார்:

நம்பனே அன்று வெண்ணெய்நல்லூரில் நாயினேன் தன்னை ஆட்கொண்ட
சம்புவே உம்பரார் தொழுதேத்தும் தடங்கடல் நஞ்சுண்ட கண்டா
செம்பொன் மாளிகைசூழ் திருமுல்லைவாயில் தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே
- (சுந்தரர் தேவாரம் - வட திருமுல்லைவாயில் - திருப்பாடல் 8)

இவ்வாறு, கண் பார்வையற்ற நிலையிலும் ஈசனின் திருவடிகளையே பற்றுக்கோடாகக் கொண்டு சுந்தரர் பாடிய இத்திருப்பதிகம், இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுக்கும் அடியவரின் ஆழ்ந்த பத்தியையும் உரிமையையும் வெளிப்படுத்துகின்றது.

திருவாலங்காட்டு எல்லையில் சிவவழிபாடு

சுந்தரர் இரு கண்பார்வையும் மறைந்த நிலையிலேயே திருவொற்றியூரிலிருந்து புறப்பட்டு, வட திருமுல்லைவாயில், திருவெண்பாக்கம் முதலிய திருத்தலங்களைப் போற்றியவாறு பயணிக்கின்றார். இவ்வாறு அன்பர்களுடன் வழிநடந்து திருவாலங்காட்டின் எல்லையிலுள்ள பழையனூரைச் சென்றடைகின்றார். காரைக்கால் அம்மையார் **"இறவாத இன்ப அன்பு"** வேண்டித் திருத்தலையாலே நடந்து வலம் வந்து பேறு பெற்ற புனிதத் தலமாதலின், அத்தலத்தினுள் தமது கால்களைப் பதிக்கவும் வன்தொண்டர் அஞ்சுகின்றார். எனவே, ஆலங்காட்டு நகருக்குள் செல்லாமல், அதன் அருகிலுள்ள பழையனூரிலேயே தங்கியவாறு ஆலங்காட்டுறைப் பரம்பொருளை மனமுருக வணங்குகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:



அங்கணர்தம் பதியதனை அகன்றுபோய் அன்பருடன்
பங்கயப் பூந்தடம்பணை சூழ் பழையனூர் உழையெய்தித்
தங்குவார் அம்மை திருத்தலையாலே வலம்கொள்ளும்
திங்கள் முடியாராடும் திருவாலங்காட்டின் அயல்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 282)

பழையனூரில் தங்கியிருந்தவாறே, **"அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே"** எனும் அற்புதத் திருப்பதிகத்தினால் வடாரண்யேசுவரப் பெருமானைப் போற்றித் துதிக்கின்றார். இறைவனிடம் தமக்குள்ள உரிமையையும், அடியார்களுக்கு அடியாராக இருக்கும் உயரிய பத்தியையும் இப்பாடல் வழியே வெளிப்படுத்துகின்றார்:

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழையனூர் மேய
அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே
- (சுந்தரர் தேவாரம் - திருவாலங்காடு - திருப்பாடல் 1)

இவ்வாறு, காரைக்கால் அம்மையாரின் பெருமைக்கு மதிப்பளித்துத் தலத்தின் எல்லையிலிருந்தே இறைவனைப் பணிந்து பாடிய சுந்தரரின் செயல், சிவனடியார்களின் மீது அவர் கொண்டிருந்த அளப்பரிய மரியாதையையும் பண்பாட்டையும் உலகுக்கு உணர்த்துகின்றது.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
படம்-தேவராஜன் நடராஜன்

சிவபூமியில் சிவனைத் தேடி

சைவசமய மரபின் பெருமையை பறைசாற்றிடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அருள்மிகு பார்வதி உடனுறை பரமேசுவரன் திருக்கோயில்





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலையாணி முதுகலையாணி, பிரான்சு

ஈழ மணித் திருநாட்டில் சிவபூமியின் மகுடமாகத் திகழும் யாழ்ப்பாண நன்னகரின் உயர்கல்விக் கூடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குருவருள் திருவருளாகக் கனிந்து அருளாட்சி புரியும் திருக்கோயிலே அருள்மிகு பார்வதி உடனுறை பரமேசுவரன் திருக்கோயிலாகும்.

திருக்கோயில் தோற்றுவாய்

உலகின் முழுமுதற் கடவுளான பரமேசுவரனின் பத்தனாக விளங்கிய சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், ஆறுமுகநாவலரின் தாயார் வழிவந்தவரும், திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரின் குடும்ப வழிவந்தவருமான சுப்பிரமணியம் என்னும் அன்பரின் உதவியுடன் திருநெல்வேலியில் பெரியவளவு ஒன்றை வாங்கினார். அங்கு சைவ மாணவர்கள், சைவப் பண்பாட்டு நெறிகளோடும் விழுமியங்களோடும் கல்வி கற்பதற்காகத் தான் வழிபடும் பரமேசுவரனின் பெயரில் பரமேசுவரா வித்தியாலயத்தை கி.பி. 1919 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இது நாளடைவில் பரமேசுவராக் கல்லூரி என்று அழைக்கப்படலாயிற்று.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் **“திரிகரணசுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்”** என்னும் மகுடவாசகத்தைச் சூட்டிப் பரமேசுவரா வித்தியாலயத்தை இயக்கிக் கொண்டு வரும் நாட்களில், குருகுலவாசக் கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுக்கும் விதமாக மாணவர்கள் வசதியாகத் தங்கியிருந்து கற்பதற்கு விடுதியையும் அமைத்து, சைவப்பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்களை அவ்விடுதிக்குரிய மேற்பார்வையாளராகவும் தலைமை ஆசானாகவும் நியமித்திருந்தார். இவருக்குப் பின்பு கி.பி. 1928 ஆம் ஆண்டு இவ்வித்தியாலயம் பரமேசுவராக் கல்லூரி என்ற பெயரில் தரம் உயர்த்தப்பட்டது. அக்காலம் முதலாக மாணவர்கள் சைவ ஆசார முறைகளைப் பேணுவதற்காகப் பிரார்த்தனை மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார். இது பற்றிப் பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய குறிப்புகள் நன்கு கவனிக்கத்தக்கன:

“மாணவர்கள் ஆசாரசீலராய் வருதல் வேண்டும். தூய உடை தரித்து, திருநீறு பூசி, சந்தனம் பொட்டிட்டு வருதல் வேண்டும் என்பது இறுக்கமான கட்டுப்பாடாகும். காலையில் மாணாக்கர்கள் தம்மைப் பரமேசுவரனிடம் ஒப்படைத்து வழிபட்டுத் திருவருட் பிரசாதம்





பெறுவதற்கு வசதியாக அன்று பெரிய கட்டடத்தின் மேல்மாடியின் வடக்குப் பாகத்தின் நீண்ட மண்டபம் பிரார்த்தனை மண்டபமாயிருந்தது. அங்கே தெற்கு நோக்கிய பெரிய கேடகத்தில் ஐம்பொன்னாலாய சோமாஸ்கந்த மூர்த்தி எழுந்தருளியிருந்தார். அவருக்குக் காலை, மாலை பூசை செய்வதற்குச் சரவணபவன் என்னும் சிவப்பிராமணர் இருந்தார்."

(நன்றி: பரமேசுவரம், மகாகும்பாபிசேக மலர், 2022, பக். 04)

இவ்வாறு பரமேசுவரர் திருக்கோயிலுக்குரிய ஆரம்பம் இக்கல்லூரியில் இராமநாதன் அவர்களால் கால்கோள் இடப்பட்டது. அவரும் இப்பிரார்த்தனை மண்டபத்திற்கு இடையிடையே வருகை தந்து திருமுறைப் பாடல்களைப் பாடியும், உரையாற்றியும் சென்றிருக்கின்றார்.

நாளடைவில் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் சிவனாருக்கு **"பரமேசுவரப் பெருமானார்"** என்று பெயர் சூட்டி, சிறப்பு நாள்களில் திருமுழுக்கு (அபிடேக) வழிபாடுகள், விரத நாட்களில் பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. மற்றும் மரபு வழிவந்த ஏடு படித்தல், ஏடு தொடங்குதல், இசைக்கச்சேரி, நாட்டியம், நாடகம் என்பனவும் நடைபெற்று வந்தன.

கற்றளித் திருக்கோயில் அமைப்பும் திருக்குட நன்னீராட்டும்

1974 ஆம் ஆண்டு முதல் பரமேசுவரக் கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக இயங்கத் தொடங்கியது. அன்று முதல் பரமேசுவரனுக்கு ஆகமவிதிப்படி ஓர் திருக்கோயில் எழுப்புவதற்கு இராமநாதன் அவர்கள் திட்டம் தீட்டியிருந்தார். இதன்படி பரமேசுவரப் பெருமானின் திருவருளால் சிங்கள அன்பர்களுடன் பேசிப் பாரிய கருங்கற்களை வியாங்கொடையிலிருந்து புகைவண்டி மூலம் வரவழைத்தார். அந்தணப் பெரியார்களின் நல்லாசியோடு 1926 ஆம் ஆண்டு பரமேசுவரன் திருக்கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் நாள் குறிக்கப்பட்டு, அப்பணி செவ்வனே நிறைவு செய்யப்பட்டு, வடக்குத் தெற்காக நீள அகலமுடைய மண்டபத்துடன் கருவறையும் சேர்த்துப் பரமேசுவரன் கோயிலாக அமைந்தது. இது பற்றி க. சி. குலரத்தினம் குறிப்பிட்ட கட்டுரையில் ஒரு பகுதி பின்வருமாறு விளக்கத்தைத் தருகின்றது:

"ஆகமங்கள் வல்ல அந்தணப் பெரியார் களையும், சிவாசாரியார்களையும் கலந்து உரை யாடி வந்தார். திருக்கோயிலுக்கு வேண்டிய கருங்கற்களைப் பெறுவதற்குத் தமக்குப் பழக்க மான வியாங்கொடை சிங்களப் பெரியார்களோடு பேசியிருந்தார். அன்று 1926 ஆம் ஆண்டில் நல்லதொரு நாள் திருக்கோயிலுக்கு அத்திபாரம் அமைக்கும் நாள் கல்லூரி வளாகம் வாழைத் தோரணங்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. வடக்குத் தெற்காக நீளம் அகலம் உள்ள ஆழ மான அத்திபாரக் குழி வெட்டப் பெற்று இருந்தது. அர்ச்சகர் சரவணபவ குருக்கள், கல்லூரி அதிபர் இராமநாதன் வாமதேவா, ஆலோசகர் சைவப்பெரி யார் சு. சிவபாதசுந்தரம், அந்தண ஆசிரியர்கள் நம்பிக்கைக்குரிய தம்பு தட்சிணாமூர்த்தி முதலானோர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வேளையில் காலந்தவறாமல் சேர். இராமநாதன் தமது வண்டியில் வந்திறங்கினார்."

(நன்றி: பரமேசுவரம், மகாகும்பாபிசேக மலர், 2026, பக். 08)

இக்கோயிலின் முதற்குடமுழுக்கு 1928 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதன்பின்பு திருக்கோயில் பல திருத்த வேலைகளுடன் புதிதாகப் பொலிவு பெற்றது. தற்போது கருவறையை உள்தாங்கிய பெரும் மண்டபம்,

கருவறையில் பார்வதி உடனுறை பரமேசுவரன் அருளாட்சி புரியும் வகையில் அமைய, அதன் நேரே நந்தியும் பலிபீடமும் அமைந்துள்ளன. தென்னிந்திய சிவன் கோயில்களில் இடம்பெற்றுள்ள வாயில் நந்தியின் வடிவம் இத்திருக்கோயிலின் கோபுரவாசலின் முன்பே அமைந்திருக்கின்றது. திருக்கோயிலின் பெருவாயிலின் மேல் மூன்று அடுக்குகளைக் கொண்ட கோபுர அமைப்புச் சிற்பங்களுடன் காட்சி தருகின்றது. கோபுரத்தின் இரு பக்கங்களிலும் மணிக்கோபுரம் அமைந்துள்ளது. பார்வதி, விநாயகர், முருகன், வைரவர், ஒன்பான் கோள்கள் (நவக்கிரகங்கள்) என்பவற்றுக்குத் தனித்தனி சந்நிதிகளும் அமைந்துள்ளன. நடராசரும் பார்வதியும் மாணிக்கவாசகரும் இணைந்த நடராசர் சந்நிதியும் அமைந்துள்ளது. திருக்கோயிலின் அருகாமையில் வேதாகமப் பாடசாலை, கிழக்குப் பக்கம் நாகலிங்கமரம் மற்றும் தேக்கு, அத்தி, கமுகு, நெல்லி முதலிய மரங்களும், பூந்தோட்டமும் திருக்கோயிலை இயற்கை எழில் கொஞ்சும் அமைப்பாக மாற்றியுள்ளன. திருக்கோயிலின் இருபக்கத்திலும் சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் மற்றும் சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் உருவச் சிலைகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

புனரமைப்புத் திருக்குட நன்னீராட்டு

இத்தகு சிறப்புகள் பொருந்திய இத்திருக்கோயில் 06-07-2022 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு குடமுழுக்கு கண்டது. அதன் நினைவாகப் பரமேசுவராக் கல்லூரி இயக்குநர் சபை **'பரமேசுவரம்'** எனும் பெயரில் மகாகும்பாபிசேக மலரையும் வெளியிட்டிருந்தது. குடமுழுக்குப் பத்திரிகை முகப்பில் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் இத்திருக்கோயிலின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் மேல்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளன:

"சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பட்ட தமிழ்மணித்திரு நாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில், தெய்வீகச் சிறப்புடன் திகழ்வதும், சைவசமய மரபின் பெருமைக்கும் அடியார்களின் வழிபாட்டிற்கும் உரியநிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடுநாயகமாக விளங்கி அடியவர்கள் குறைதீர ஆலந்தானுகந்து அமுது செய்து அருள்பாலிக்கும் ஆதியாகிய ஸ்ரீ பரமேசுவரப் பெருமான் எழுந்தருளி அருள் சுரக்கும் புண்ணிய தலம் ஸ்ரீ பார்வதி சமேத பரமேசுவரன் திருக்கோயில் ஆகும். சைவப்பெரு வள்ளலாளர் சேர். பொன். இராமநாதனால் தென்திசை நோக்கிய ஞானலிங்கமாக உருவாக்கப்பட்ட இத்திருக்கோயில் காலம் காலமாக எம்மரபுகளைப் பாதுகாத்து வரும் பண்பாட்டு மையமாகவும், என்றும் நாவலர் போற்றிய சைவமரபு சிறக்கவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூகம் உள்ளிட்ட எம் அனைவரினதும் வாழ்வும் வளமும் பெற ஆற்றுப்படுத்தி அருள் சுரந்து காத்தருளும் பரமேசுவரப்பெருமானை நடுநாயகமாகக் கொண்டது."

நாள் வழிபாடுகளும் திருவிழாக்களும்

இத்திருக்கோயிலில் தைத்திருநாள், பெருஞ் சிவனிரவு, ஒன்பான் இரவுகள் மிகச்சிறப்பான பூசை களாக இடம்பெற்று வருகின்றன. திருக்கார்த்திகை தினத்தில் விளக்குகள் ஏற்றிச் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறுவதோடு, சொக்கப்பானை கொளுத்தும் மரபும் இடம்பெற்று வருகின்றது. பின்னர் அலங்காரத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது. நாள்தோறும் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. அத்தோடு நாயன்மார்களின் குருபூசை, சேர். பொன். இராமநாதன் குருபூசை, நாவலர் பெருமானின் குருபூசை என்பனவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

இத்தலத்தின் கீர்த்தியை வித்துவான் க. வேந்தனார் அவர்கள் 'அருள்மிகு பார்வதி உடனுறை பரமேசுவரன் திருக்கோயில் திருவூஞ்சல்' என்ற பெயரில் அற்புதமான பாடல்களை அருளியுள்ளார்:

"பொன்னகராம் யாழ்ப்பாணப் பல்க லையின்
புகழ்பூத்த கழகத்தின் திலகமாகப்
பொன் ராம நாதவள்ளல் பொதித்த கோயில்
பொன்னைய னாம்பரமேசுவரனும் தேவி
பொன்னம்மை பார்வதியும் எழுந்தருளிப்
பூந்தமிழின் திருவூஞ்சல் பொலிந்தே ஆட
வன்னமருப் பொசித்துக் கவி எழுதித் தந்த
வாரணனின் செஞ்சரணம் காப்பதாமே"

மலையகத்தில் மாணிக்கவாசகர் அறநெறிப்பாடசாலை திறப்பு விழா



கண்டி மாவட்டம், மல்பெரி தோட்டப் பகுதியில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட மாணிக்கவாசகர் அறநெறிப்பாடசாலையின் திறப்பு விழா கடந்த 21-10-2026 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இப்பகுதியிலுள்ள 45 மாணவர்களும் ஊர் மக்களும் பெருமகிழ்ச்சி அடையும் வகையில், ஞாயிறு தோறும் சமயக் கல்வி பயிலும் இப்பாடசாலையின் பழைய கட்டடம் முற்றாகப் புதுப்பிக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இப்பகுதிக்குச் சென்ற சீர் சுப்பிரமணிய கோட்டத்தினர், பழுதடைந்த கட்டடத்தில் மாணவர்கள் சிரமங்களுக்கு மத்தியில் சமயத்தையும் பண்பாட்டையும் பயில்வதைக் கண்டனர். இதனையடுத்து, **தவத்திரு. ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின்** உயரிய சிந்தனையின் வண்ணம், கனடாவில் வசிக்கும் அன்பர் ஒருவர் தனது மறைந்த கணவரின் நினைவாக வழங்கிய தாராள நிதியுதவியுடன், சீர் சுப்பிரமணிய கோட்டத்தின் முயற்சியால் மாணவர்கள் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் கல்வி கற்கும் வகையில் இப்புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது.

மலையகப் பகுதிகளில் குறைந்த வளங்களுக்கு மத்தியிலும் நமது சமயம், விழுமியங்கள் மற்றும் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதில் அறநெறிப் பாடசாலைகள் ஆற்றும் பணி அளப்பரியது. இத்தகைய அறநெறிப் பாடசாலைகளை வலுப்படுத்துவதன் ஊடாக, எதிர்காலத் தலைமுறையினரின் உள்ளங்களிலும் சிந்தனைகளிலும் சைவ விழுமியங்களை விதைக்கும் உன்னதப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்



ஈழத்துச் சித்தர்கள்

கடையிற் சுவாமிகளும் சீடர்களும்



சித்த வைத்தியர்
கணேஸ் கபிலன்
(யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

உசன் சமாதி மடம்

உசன் மடம் பற்றி இன்னும் சில தகவல்கள் கிடைக்கப் பெற்றன. அதை இங்கு கூறுகின் றேன். உசன் மடத்தில் மூல ஆலயமாக சிவகாமியம்மன் திருக்கோயில் உள்ளது. சிவ காமியம்மன் மிகப் பழைமையானவர். பொன்னம்மாள் அம்மையாரால் வழிபடப்பெற்றவர்.போர்ப் பிரச்சினை காலத்தில் இவ் அம்மன் சிலை நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலில் வைத்து வழிபாடு இயற்றப்பட்டுள்ளது. (ஏற்கனவே அம்மன் திருக்கோயில் என்று எழுதியிருந்தேன்)

1975 ஆம் ஆண்டுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று. ஒரு முறை இந்த அம்மன் சிலை களவு போய்விட்டதாம். மங்கையற்கரசி அம்மாவுக்கு கனவில அம்மன் தோன்றி, "என்னை உருக்கப் போறாங்கள். சீக்கிரம் போய் தடு "என்று கூறி இடக்குறிப்பையும் கூறினாராம். உடனே மங்கையற்கரசியம்மா சுன்னாகம் காவல்துறை அதிகாரியாக இருந்த பொன்னுத்துரை என்பவரையும் கூட்டிச் சென்று சிலையை மீட்டாராம். (இக்கதையை இப்போது சிலர் நீர்வேலியில் அம்மன் இருக்கும் போது கனவில் தோன்றி தன்னுடைய பழைய இடத்திற்கு கொண்டு சேர்க்கும்படி சொன்னதாக கூறுகின்றனர். அது உண்மை இல்லை என்று இப்போது மடத்திற்கு பொறுப்பாக உள்ளவர்கள் கூறுகின்றனர்.)

உசன் மடத்தில் போருக்கு முன்னர் சடைவரதரின் திருவடி மற்றும் கட்டில் என்பன இருந்ததாகவும் மடத்திற்கு பொறுப்பானவர்கள் கூறுகின்றனர். மேலும் இப்போது கிழக்குப் பக்கம் பார்த்தபடி இருக்கும் அம்மன் திருக்கோயில் ஆரம்பத்தில் மேற்குப் பக்கமாக கிணற்றடியைப் பார்த்த வண்ணம் இருந்ததாக கூறுகின்றனர். கிணற்றடிக்கு அருகில் தான்



பொன்னம்மாள் சமாதி இருந்ததாகவும், சமாதியைப் பார்த்த வண்ணம் அம்மன் கோயில் இருந்ததாக கூறப்படுகின்றது.

மடத்துடன் தொடர்புடைய அடியார்களைப் பற்றி சில தகவல்களைத் தருகின்றேன்.

ஏற்கனவே சில குறிப்புகளை எழுதியிருந்தேன். பெரியகடைச் சுவாமியின் அடியார்கள் என மதிக்கப் பட்ட காசிச்சுவாமி, கற்கண்டுச்சுவாமி ஆகிய இருவரின்

ஆசிகளைத் தான் மூன்றாவது வயதில் பெற்றதை இல்லற ஞானி இராமச்சந்திரனார் நயினை முத்துக்குமார சுவாமிகளுக்கு கூறிய தகவல் இலங்கையில் ஓர் இல்லற ஞானி எனும் நூலில் உள்ளது. 1898 ஆம் ஆண்டு காலப்பகுதியாக இருக்கலாம். இராமச்சந்திரனார் 1895 ஆம் ஆண்டு பிறந்துள்ளார்.

அந்த காசிச்சாமியார் தான் முருகேசுச் சுவாமிகளின் குருவோ தெரியவில்லை. காசிப்பிள்ளை சுவாமிகள்

என்ற பெயரில் ஓட்டுவெளி முருகன் கோயிலுக்கு பின் ஒருவரின் சமாதி உள்ளது. அவர் 1960 களில் வாழ்ந்தவராக கருதப்படுகின்றார். மேலும் மௌனகுரு சுவாமிகள் என்ற ஒருவரின் சமாதி கொடிகாமம் பாலாவியில் உள்ளது. அண்மையில் தான் இவரது குருபூசையும் (தீபாவளி தினமன்று) இடம்பெற்றது. அவர் கடையிற் சுவாமி, சின்னையா சுவாமிகளுடன் தொடர்பு பட்டவர். அங்குள்ள பெரியவர்கள் தமக்கு தெரிந்தவற்றை கொண்டு அவர் வரலாற்றை பின்வருமாறு கூறுகின்றனர். அவர் நல்லூரைச் சேர்ந்தவர் என்றும் நல்லூரில் இருந்து இவர் சமாதிக்கு அவர் உறவினர்கள் குருபூசை செய்வதாகவும் அவருக்கு மாமிசம் படைப்பதாகவும் கூறுகின்றனர். சின்னையா சுவாமிகளை தங்கள் குருவாக நினைத்து அவருக்கு உணவு படைத்த பின்னரே தாங்கள் உண்கின்றார்கள். கடைநாதன் பூசை ஒன்று செய்வதாகவும் அந்த பூசையில் மீன் போன்றன படைப்பதாகவும் கூறப்படுகின்றது.

முருகேசுச் சுவாமி தீவுப் பகுதியைச் சேர்ந்தவர். கொடிகாமத்தில் நிறையக் காலம் இருந்ததாக கூறப்படுகின்றது. இவர் சடைவரதருக்கும் பொன்னம் மாள் அம்மைக்கும் குருவாக இருந்தவர். அவரது சமாதி எங்குள்ளது? என்பது கேள்விக்குறியாக இருந்தது. ஆனால் இப்போது அவரது சமாதி கோயிலை கண்டுபிடித்து விட்டேன்.

கொடிகாமத்தில் தண்டவாளத்திற்கு அருகில் மடத்தடி சிவன் கோயில் உள்ளது. அது சமாதி திருக்கோயில் என்று தற்போது கேள்விப்பட்டேன். அது முருகேசு சுவாமியாரின் சமாதி கோயில் என்று அக்கோயிலுடன் தொடர்புடையவர்கள் கூறுகின்றனர். முதலில் பெரிய மடமாக இருந்ததாம். கொடிகாம மடம் என்று இதனைக் கூறுகின்றனர். ஆவணி உத்தரம் தான் முருகேசு சாமியாரின் குருபூசை என்று ஆத்மஜோதி இதழில் வெளிவந்த குறிப்பை முதலில் பதிவிட்டிருந்தேன். ஆவணி உத்தரம் அன்று தான் இக்கோயிலிலும் பெரிய வேள்வி வளர்த்து திருமஞ்சனம் நடைபெறுகிறதாம். சாமியாரது சமாதி வைத்த நாளே ஆவணி உத்தரம் என்று கூறுகின்றனர். இந்த ஒற்றுமையே போதும்.

அருளானந்த சிவம் ஐயா எழுதிய குறிப்பு ஆத்ம ஜோதியில் வெளியாகியது. அதில் கடையிற் சுவாமிகள், காசி அடிகள், முருகேசு சுவாமிகள், பொன்னம்மாள் அம்மையார், சடைவரதர் என்று குரு சீட பரம்பரை தொடர்கின்றது என்பதை பாடல்வடிவில் எழுதியிருந்தார். காசி அடிகள் தான் இவருக்கு குருவாக இருந்திருக்கலாம். காசி அடிகள், கடையிற் சுவாமிகளின் அடியவர் என்பதை இல்லறஞானி இராமச்சந்திரனார் கூறுகின்றார்.

இதை உறுதி செய்யும் வகையில் முருகேசு சுவாமியாரின் சமாதிக்கு மேலே நர்மதை இலிங்கம் உள்ளது. அது அவர் பூசித்த இலிங்கம் என்று கூறப்படுகின்றது. காசி அடிகள் வழங்கிய இலிங்கமாகக் கூட இருக்கலாம்.காசியடிகள் பற்றிய மேலதிகமான தகவல்கள் கிடைக்காமலே உள்ளன.

இம்மடத்தில் இறுதியாக இருந்தவர் மங்கையற கரசியம்மையார். இவரது குருபூசை அண்மையில் நடந்தது (ஐப்பசிக் கேட்டை). இவர் சிறுவயதாக இருக்கும் போது நடக்கமுடியாமல் இருந்தாராம். அங்கு வந்த சடைவரத சுவாமிகள் அன்று வீட்டில் இருந்த பழஞ்சோற்றையும், பாகற்காய் கறியையும் குழைத்து ஊட்டினாராம். எழும்பி நட என்று சொன்னாராம். உடனே கால் சுகமானதாம். அன்றில் இருந்து சுவாமியின் பத்தையாகிட்டாராம்.

மங்கையற்கரசியம்மையார் அடிக்கடி கொழும்புத் துறை சென்று யோகசுவாமிகளை வணங்கி வருவதுண்டு. ஒருநாள் பதினொரு வயதாக இருந்த குணரத்தினம் ஐயாவைக் (மடத்திற்கு தற்போது பொறுப்பாக உள்ளவர்) கூட்டிச் சென்றுள்ளாராம். யோகசுவாமிகள், உனக்குப் பிறகு இவன் தான் மடத்திற்குப் பொறுப்பாக இருப்பான் என்று அருள்வாக்கு கூறியுள்ளார்.

மேலும் இறுதிக்காலத்தில் மங்கையற்கரசியம்மை யாருக்கு கண் தெரியாதாம். குணரத்தினம் ஐயாவுக்கு அந்நேரத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்ததாம். குணரத்தினம் ஐயாவின் மனைவியை தொட்டுப் பார்த்து தம்பிக்கு ஏற்ற நல்ல பெண்தான்" என்று ஆசி வழங்கினார்.மேலும் இம்மடத்தோடு ராமச்சந் திரன் என்பவரும் கொட்டில் போட்டு துறவியாக இருந் துள்ளாராம்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

அடியார் திருவடியே அழியாத பெருஞ்செல்வம் என வாழ்ந்து காட்டிய அப்பூதியடிகள் நாயனார்





சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி

அடியார் பத்தி, குருபத்தி யின் மேன்மை, விருந்தோம் பல் அறம், மன உறுதி, சமூகப் பொறுப்புணர்வு ஆகிய விழுமியங்களை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய அப்பூதியடிகள் நாயனார், இறைவனை வழிபடுவதோடு அடியார் தொண்டையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்.

சோழ நாட்டின் திங்களூரில் அந்தணர் மரபில் பிறந்த இவர், இல்லறத்தில் நின்று சிவனடியார்களை வரவேற்று உபசரிப்பதிலும் உதவுவதிலும் பேரார்வம் கொண்டிருந்தார். இவரைச் சுந்தரமூர்த்தி நாயனார் **"ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்"** எனத் திருத்தொண்டத்தொகையில் போற்றியுள்ளார்.

நம்பியாண்டார் நம்பியும் திருத்தொண்டர் திருவந்தாதியில்,

தனமாவது திருநாவுக் கரசின் சரணமென்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயல் திங்களூரினில் வேதியன் அப்பூதியே

- (திருத்தொண்டர் திருவந்தாதி: 11:34:30)

எனப் பாடியுள்ளார். திருநாவுக்கரசரை நேரில் காணாவிடினும், அவரது பெருமையையும் தியாகத்தை யும் செவிவழியாக அறிந்து அவரைத் தமது குருவாக மனத்தில் நிறுத்தினார். இதனால் தமது பிள்ளைகளுக்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப் பெயரிட்டதோடு தாம் பேணும் உயிரினங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், சத்திரங்கள், மடங்கள், சாலைகள், குளங்கள், அன்னதானம் உள்ளிட்ட பொதுநலத் தொண்டுகள்

அனைத்திற்கும் திருநாவுக்கரசரின் பெயரையே சூட்டி மகிழ்ந்தார்.

ஒருமுறை தலயாத்திரையாகத் திங்களூர் வந்த திருநாவுக்கரசர், தமது பெயரால் அறச்செயல்கள் நிகழ்வதைக் கண்டு வியந்து அப்பூதியடிகளின் இல்லத்திற்கு அடியாராகச் சென்றார். அவரை எதிர்கொண்டு வணங்கிய அப்பூதியடிகளின் பத்தியைச் சேக்கிழார்,

கடிது அணைந்து வாகீசர் கழல் பணிய மற்று அவர் தம்
அடி பணியா முன் பணியும் அரசின் எதிர் அந்தணனார்
முடிவில் தவம் செய்தேன் கொல் முன்பொழியும் கருணை புரி
வடிவுடையீர் என் மனையில் வந்து அருளிற்று என் என்றார்.

- (பெரியபுராணம்: 12:31:10)

எனப் போற்றுகிறார். "உங்கள் பெயரால் அறம் செய்யாது திருநாவுக்கரசரின் பெயரால் செய்வது ஏன்?" என வினவிய நாவுக்கரசரிடம், அவரது சைவத் தொண்டின் பெருமையையும், இறைவனை விட அடியார் பத்தியே சிறந்தது என்பதையும் அப்பூதியடிகள் எடுத்துரைத்தார். அவரது தூய அன்பை உணர்ந்த திருநாவுக்கரசர் தாமே அவர் என்பதை வெளிப்படுத்த, அப்பூதியடிகள் ஆனந்தக் கண்ணீர் மல்கக் குடும்பத்தினருடன் அவரை வணங்கி மகிழ்ந்தார்.

பின்னர், திருநாவுக்கரசருக்கு அறுசுவை விருந்தளிக்க எண்ணிய அப்பூதியடிகள், வாழையிலை அறுத்து வருமாறு மூத்த மகனைத் தோட்டத்திற்கு அனுப்பினார். அங்குப் பாம்பு தீண்டி மகன் உயிரிழந்தபோதும், அடியார் விருந்தோம்பலுக்கு இடையூறு நேரக்கூடாது எனத் துயரத்தை மறைத்த குருபத்தியை,

"பெறல் அரும் புதல்வன் தன்னைப் பாயினுள் பெய்து முடிப்
புற மனை முன்றில் பாங்கு ஓர் புடையினில் மறைத்து வைத்தே
ஆறது தெரியா வண்ணம் அமுதுசெய்விப்போம் என்று
விறல் உடைத் தொண்டனார் பால் விருப்பொடு விரைந்து வந்தார்"

- (பெரியபுராணம்: 12:31:29)

எனப் பெரியபுராணம் விளக்குகிறது. மகனின் சடலத்தைப் பாயில் சுருட்டி முற்றத்தில் மறைத்து வைத்துவிட்டுத் திருவமுது படைக்க அழைத்தபோது, மூத்த மகனைக் காணாத திருநாவுக்கரசர் அவனையும் அழைக்குமாறு கூறினார். உண்மையை மறைக்க இயலாமல் நிகழ்ந்ததை அப்பூதியடிகள் தெரிவித்தார். இதனை அறிந்து வருந்திய திருநாவுக்கரசர், சிறுவனின் உடலுடன் திங்களூர் கைலாசநாதர் திருமுன்னிற்கு வருமாறு பணித்து,

"ஒன்று கொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்று கொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்று கொலாமிடு வெண்டலை கையது
ஒன்று கொலாமவ ரூர்வது தானே"

- (திருநாவுக்கரசர் தேவாரம்: 04:18:01)

எனும் பதிகத்தைப் பாடிச் சிறுவனை உயிர்ப்பித் தருளினார். அதன்பின் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தினர். திருநாவுக்கரசரும் திருப்பழனம் பதிகத்தில் இவரது தூய பத்தியை,

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கொடியையே

- (திருநாவுக்கரசர் தேவாரம்: 04:12:10)

எனப் போற்றியுள்ளார். நேரில் காணாமலேயே ஒருவரின் நற்பண்புகளால் ஈர்க்கப்பட்டு ஆழ்ந்த குருபத்தி கொள்ள முடியும் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்த அப்பூதியடிகள் நாயனார், தை மாதம் சதயத் திருநாளில் சிவபெருமானின் திருவடிப் பேற டைந்தார்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்

சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருநகரச் சிறப்பு:- இது திருமலைச் சருக்கத்தில் மூன்றாவது பகுதியின் பெயர். கயிலை மலையும், சோழநாடும் இப்புராணத்திற்கு உரிய மலையும், நாடுமாகக் கொண்டமைக்குக் காரணம் முன்னர்க் கூறப்பெற்றது. இப்புராணத்திற்குச் சொல் மூலம் எனும் திருத்தொண்டத் தொகை எழுந்த இடமும், அதற்குப் பொருளாகிய அடியார் கூட்டமும் எழுந்தருளிய இடமும் ஆகிய திருவாரூரே இதற்கு உரிய நகரமாம் என்பதும் முன்னர்ச் சொல்லப் பெற்றது.



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

பாடல் - 1

சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்பழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்.

பொருள்:- நாட்டுச் சிறப்பினால் சொல்லப்பட்ட பல நகரங்களினும் மிகப் பழமை வாய்ந்தது. இலக்குமி தேவியினால் வழிபடப் பெற்றது. வன்னியும் கங்கையும் இளமதியும் தங்கிய சிவந்த சடைமுடித் தலைவ ராகிய தியாகேசர் எழுந்தருளிய திருவாரூர்த் திருநகரமாம்.

வி-உரை:- நாட்டு இடை மிக்கது:- அந்நாட்டின் எல்லா நகர்களும் பழமையானவையே. “வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்” (நாட்-சிறப்பு-26) அவற்றினுள் மிகப் பழமை வாய்ந்தது என்க.

சொன்ன நாட்டிடை:- பொன் உலகமாகிய தேவ உலகத்தைவிட என்றும் தேவ உலகத்தில் தொன்மை மிகுந்தது என்பதற்கு இத்திருநகரத்தை ஆளும் தியாகராசப் பெருமான் இங்கு நின்றும் போந்து பலகாலம் திருப்பாற்கடலிலே விட்டுணுமூர்த்தியின் மார்பிலேயும், அதன் பின்னர் பல காலம் தேவ உலகத்திலேயும், அதன் பின்னர் மீளும் திருவாரூரிலேயும் எழுந்தருளினார் என்னும் சரித வரலாறு ஆதரவாம். “அமரர் நாடாளாத ஆரூர் ஆண்ட அயிராவணமே” என்றும், “நீங்கிய நீர்த்தாமரையாள் நெடுமாலோடு இல்லா எம்பலமாகண என்றங்கு ஏத்தி வாங்கி மதி வைப்பதற்கு முன்னோ பின்னோ வளர் ஆரூர்க் கோயிலாக் கொண்ட நாளே” என்றும் வரும் திருத்தாண்டகங்களும் பிறவும் காணலாம்.

மன்னு மாமலராள் வழிபட்டது:- இலக்குமி தேவியால் வழிபடப் பெற்றது. இங்கு வழிபட்டு தவம் செய்து தனது மங்கலம் என்னும் பேற்றை அடைந்தனள். இவர் வழிபட்ட திருக்குளம் கமலாலயம் என்ப. இதனாலே இந்நகர் திரு – ஆர் – ஊர் – திருவாரூர் என்று பெயர் பெற்றதாகும்.

வன்னி:- வன்னித்தழை சிவபெருமான் பூசைக்கு உகந்த பத்திரங்களில் ஒன்று. ஆறு – கங்கை, மதி – பிறைச்சந்திரன்.

சென்னியார்:- சோழர்க்கு உரிய பட்டப்பெயர்களில் ஒன்று சென்னி. சோழநாட்டின் இறைவர் என்று இருக்கச் சென்னியார் என்றதுமாம்.

பாடல் - 2

வேத வோசையும் வீணையி னோசையும்
சோதி வானவர் தோத்திர வோசையும்
மாத ராடன் மணிமுழ வோசையும்
கீத வோசையு மாய்க்கிளர் வுற்றது.

பொருள்:- வேதம் பயிலும் ஓசை – வீணைகள் வாசிக்கும் ஓசை – சோதி பொருந்திய தேவர்கள் துதிக்கும் ஓசை – பெண்கள் ஆடலிலும் அதற்கு இசைய முழக்கும் முழவுகளிலும் கூடி எழும் ஓசை ஆகிய இவைகள் கீதங்களின் ஓசையுடன் ஒன்றாகி எங்கும் கிளர்ந்து விரவிச் சந்தித்தன. இந்தப் பற்பல சத்த வகைகளெல்லாம் அந்நகரிலே பொருந்திப் பெருங் கிளர்ச்சியைத் தந்தன.

வி-உரை:- ஓசை – பொருளற்ற சத்தம். ஒலி – பொருளுடைய சத்தம். "வேதத்த ஒலி கொண்டு வீணை கேட்பார்" – (திருத்தாண்டகம்) என்ற திருவாக்கின்படி வேதமும் வீணையும் ஒருங்கே வைக்கப்பெற்றன. இது சிருட்டிக்காலத் தொடக்கத்தைக் குறிக்கும். திருவாரூர்த் திருநகரம் பிரகிருதித்தன்மையதும் அதுவே சிருட்டிக்கு ஏதுவாதலும் குறிப்பு.

இவ்வோசைகள் சிருட்டித் தொடக்கத்தில் இறைவனிடத்தில் இருந்து தோன்றும் என்க. இனி இவ்வோசைகள் அடியார்கள் இறைவர் திருமுன்பு முழக்கும் வேத கானமும், வாசிக்கும் வீணை என்று உரைத்தலுமொன்று. சிருட்டிக் காரியத்தைக் குறிப்பதாகிய திருப்பள்ளி எழுச்சியிலே "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" என்று இவ்விரண்டையும் அடுத்துக் கூறிய திருவாசகமும் காணலாம்.

சோதி வானவர்: ஒளி உருவமுடையவராதலின் சோதி என்றார். திவ்விய உருவமுடைமை பற்றியே இவர்கள் தேவர் எனப்படுவர்.

மாதர் ஆடல் மணிமுழவோசை:- மாதர்கள் ஆட அதற்குத் தக்கபடி முழவு முழக்க உண்டாகும் ஓசை. "வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர்" – (தேவாரம்).

கீதம்:- இசையுடன் கூடிய தமிழ்ப்பாட்டு. "கீதத்தை மிகப்பாடும் அடியார்கள்" (திருப்புள்ளிருக்கு வேளூர் – தேவாரம்), "அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும், செந்தமிழ் கீதமும்" – (திருமழபாடி – தேவாரம்) என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரங்களும், "அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே" என்னும் அப்பர்சுவாமிகள் தேவாரமும் காணலாம்.

கிளர்வுற்றது:- நகரம் கிளர்ச்சியை அடைந்தது. வேதம் – வீணை ஓசைகள் இறைவனது சிருட்டித் தொழிலையும், தோத்திர ஓசை தேவர் செயலையும், ஆடல் முழவு, கீதம் – மனிதர் செயலையும் குறிப்பன. புறநகரில் கூத்தாடும் அரங்குகளும், மாளிகைகளும் காணலாம். இதுவே, அந்நாள் நகர அமைப்பு என்பது நூல்களால் அறியப்பெறும். தேவ உலகில் இருந்த தியாகேசர் இங்கு இருத்தலால் அவரை வழிபடவும், அடியார்களை வழிபட்டு நலம் பெறவும் தேவர்கள் இங்கு வந்து கூடுவதும் இயல்பாம்.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு

Siva P.Ketharan
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



Karthikai Vilakkeedu: A 2,000-Year-Old Flame

On Tuesday, 24 November 2026, the eighth day of the Tamil month of Karthikai, Tamil homes and temples around the world will glow with rows of small clay lamps. Karthikai Vilakkeedu, the festival of lights, falls when the full moon of Karthikai Niraimathi (Full Moon) rises together with the Karthikai star cluster, the six stars known in English as the Pleiades. It is one of the oldest festivals Tamils still celebrate anywhere.

A festival written into our oldest poetry

Few traditions can point to written evidence going back two thousand years. Karthikai Vilakkeedu can. Akananuru (Poem 141), a Sangam-age anthology, describes a night when the full moon joins the six stars, lamps are lit along the streets, garlands are hung, and crowds gather in an ancient, famous town to celebrate. The poem ends with an invitation to come and join the rejoicing. The scene it paints would feel familiar to any of us today.

Centuries later, in the 7th century CE, the Saiva saint Thirugnanasambandar sang of the festival in his Thevaaram (2.47.3) at Mylapore. Addressing Poompavai, he asks whether she will leave without seeing the Vilakkeedu that young women celebrate for Lord Kapaleechcharar on the ancient Karthikai day. By then, the festival was clearly a settled part of temple life.

More than a festival

Karthikai Vilakkeedu brings almost every part of Tamil culture together in a single evening. The Tamil language carries its story. Saiva worship gives it meaning. Sangam poetry and the Thevaram preserve its history. Music, dance and temple sculpture frame the celebration, while shared meals and family gatherings give it warmth. Underneath it all are the values our elders taught us: love, virtue and hospitality.

That is why the festival matters so much to Tamils living far from home. Lighting a lamp is a simple act, but it links us to the streets of that Sangam town, to the temple at Mylapore, and to generations of our own families who did exactly the same.

Passing the light on

The real test of any tradition is whether the next generation carries it forward. This Karthikai, ask your children to help set out the lamps, tell them where the festival comes from, and let them light the first flame. Visit your local temple, share the evening with neighbours, and make it a celebration of community as much as faith.

For two thousand years, Tamils have lit lamps on this night. Let us make sure they keep shining for the next two thousand.

Saiva Saint Appoothi Adigal - The Charitable



Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

Appoothi Adigal Nayanar, counted as twenty-fourth among the sixty-three Nayanmars, is remembered for his profound reverence for Thirunavukkarasar and his lifelong service to the devotees of Sivaperuman. His account in the Periya Puranam is distinguished by a devotion that developed without any personal acquaintance with the saint he revered. Appoothi Adigal dedicated his charitable undertakings to Thirunavukkarasar, regarding service performed in his name as an expression of his own religious commitment. The formative trial of his life is the unexpected arrival of Thirunavukkarasar at his residence, a coincidental personal loss during preparations for the saint's meal, and the saint's choice of actions.



Background

Appoothi Adigal was born in Thingalur into a Saivite priestly family. He was known for his charitable disposition and his dedication to the welfare of others, particularly through works intended to benefit travellers and the wider community. His religious life centered around Thirunavukkarasar, whom he regarded as foremost among the devotees of Sivaperuman.

Although Appoothi Adigal had never encountered Thirunavukkarasar personally up until a very special day, his admiration for the saint governed much of his charitable activity. He established places of rest, provided drinking water and undertook the construction of roads, choultries and ponds, all in Thirunavukkarasar's name. His reverence extended into his own household, where he bestowed the saint's name upon both his Sons.

Arrival of Thirunavukkarasar

During one of his pilgrimages, Thirunavukkarasar arrived in Thingalur and encountered several charitable establishments bearing his name. Surprised to discover that such works were being undertaken in his honour, he enquired about their benefactor and learnt that they had been established by Appoothi Adigal. He subsequently sought out the devotee and introduced himself as a servant of Sivaperuman travelling on pilgrimage.

Appoothi Adigal welcomed the visitor with the hospitality customarily extended to Sivanadiyargal. During their conversation, however, he discovered that the person before him was none other than Thirunavukkarasar himself. The realisation brought him immense joy, for the saint whose name he had honoured throughout his life had now entered his own residence.

Appoothi Adigal invited Thirunavukkarasar to partake of a meal, and his family began making the necessary preparations. They received the saint with exceptional reverence, regarding his presence as that of Sivaperuman Himself. The encounter represented the fulfilment of Appoothi Adigal's long-standing desire to honour Thirunavukkarasar personally, having previously known him only through his devotion.

Death of his eldest Son

As the household prepared the meal, Appoothi Adigal's eldest son was sent into the garden to gather a plantain leaf on which the food would be served. While collecting the leaf, he was bitten by a venomous snake and succumbed to its poison.

Upon discovering their son's lifeless body, Appoothi Adigal and his wife were confronted with a profound personal tragedy. Nevertheless, their immediate concern was that the news would prevent Thirunavukkarasar from accepting the meal they had prepared. They therefore concealed the boy's body and continued their preparations, restraining their grief so that the saint's hospitality would not be interrupted.

The incident occupies a significant place in the Periya Puranam's account of Appoothi Adigal. His devotion to Thirunavukkarasar had previously found expression in charitable works carried out in the saint's absence. It was now tested under circumstances of considerable personal suffering, when the obligations of hospitality appeared to stand in conflict with the grief of his own household.

The conduct of Appoothi Adigal and his wife is particularly striking because their response was not prompted by any expectation that their son would be restored to life. Their intention was directed towards ensuring that Thirunavukkarasar would accept their hospitality, even though they had suffered the death of their eldest child. Periyapuranam thus places the strength of their devotion in the conduct that preceded the miracle, rather than in the following miraculous event itself.

Resurrection

When Thirunavukkarasar requested that Appoothi Adigal summon his son to join them for the meal, the truth could no longer be concealed. Appoothi Adigal revealed the tragedy, explaining that the boy had died after being bitten by a snake while gathering the plantain leaf.

Thirunavukkarasar was astonished by the extraordinary composure of the parents and the devotion they had demonstrated in continuing their preparations. Moved by their conduct, he had the boy's body taken to the temple, where he offered a hymn in supplication to Sivaperuman, praying that the poison might withdraw.

Through the divine grace of the lord, the poison withdrew from the boy's body, and he was restored to life. The family was thus relieved of its grief, and Thirunavukkarasar subsequently partook of the meal in their company. The incident marked the beginning of a great friendship between Thirunavukkarasar and Appoothi Adigal.

Remembrance

Appoothi Adigal Nayanar is remembered for a devotion expressed principally through charitable service and reverence for Sivanadiyargal. His life is distinctive among the sixty-three Nayanmars because his religious commitment centred upon honouring another devotee of Sivaperuman, even before any personal relationship had been established between them.

His accou also commemorates the devotion of his wife, who shared both his grief and his determination to honour their guest. Their conduct forms an essential part of the narrative, while the restoration of their son through Thirunavukkarasar's hymn demonstrates the divine grace bestowed upon their household as a whole, not just the saint.

Having dedicated his life to the service of others in the name of Thirunavukkarasar and Sivaperuman, Appoothi Adigal ultimately attained the sacred abode. His Guru Poosai is observed annually on Thai Sathayam, commemorating a Nayanmar whose life remains distinguished by steadfast devotion and service.



செவ்வேள் அறுநாள் நோன்பு (கந்தசட்டி) ஆறாம்நாள் வழிபாடுகள் (15-11-2026)



சிட்னியில் திருமுறைகளை விண்ணப்பம் செய்து வழிபாடுகள் (15-11-2026)



திருமூல நாயனார் குருபூசை (26-10-2026)

ஐப்பசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (25-10-2026)











